

மீசாலை மேற்கு மீசாலையைச் சேர்ந்த

அமரர்

# திரு மார்க்கண்டு ஸ்ரீரவிகுலன்

அவர்களின் அமரத்துவம் குறித்து

சமர்ப்பிக்கப்படும்

# நினைவு மலர்

14-05-2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

A.K.E



மீசாலை மேற்கு மீசாலையைச் சேர்ந்த

# அமரர் திரு. மார்க்கண்டு ஸ்ரீரவிகுலன்

அவர்களின்


அமரத்துவம் குறித்து சமர்ப்பிக்கப்படும்

# நினைவு மலர்

14-05-2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சமர்ப்பணம்

மண்ணுலக வாழ்வுதனில்
குடும்பமொடு சுற்றத்தார்
மற்றையோரும் மகிழ்ச்சிகொள்ள
உயர்வாகவே வாழ்ந்தீர்
பற்றுமிக்க மனைவி மக்கள்
கண்களில் நீர் ஆறாகப்
பாசமிகு தாய் தந்தை சுற்றமோடு
பரிவுடையோர் எல்லோரும் நற்சாந்தி காண
பரனடியை மிக வேண்டி இம் மலரைச் சூட்டுகின்றோம்

– குடும்பத்தினர் –





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருமுறை அமிர்தம்



## திருமந்திரம்

விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்திமகந்தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## முதலாம் திருமுறை

## திருஞானசம்பந்தர் தேவாரம்

*தலம்:- திருப்பிரமபுரம்* *பண்:- நட்டபாடை*

திருச்சிற்றம்பலம்

தோடுடையசெவியன் விடை யேறியோர்
தூவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசியென்
உள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமலரான்முனை நாட்பணிந்
தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தலம்: - திருத்தருமபுரம்* *பண்: - வியாழக்குறிஞ்சி*

மாதர்ம டப்பிடியும் மட வன்னமு மன்னதோர்
நடை யுடைம் மலைமக டுணையென மகிழ்வர்
பூதவி னப்படைநின் றிசைபாடவு மாடுவ
ரவர்படர் சடைந்நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னை தயங் கும லர்ச்சிறைவண் டறை
யெழில் பொழில் குயில் பயில் தருமபு ரம்பதியே.

## ஆறாம் திருமுறை

## திருநாவுக்கரசர் தேவாரம்

*தலம்: - திருவையாறு*

ஓசையொலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

*தலம்: - திருவாரூர்*

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாம் திருமுறை

## சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

*தலம்: - திருப்பாண்டிக்கொடுமுடி* *பண்: - பழம்பஞ்சுரம்*

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும்நா நமச்சி வாயவே.

*தலம்: - திருக்கோளிலி* *பண்: - நட்டராகம்*

நீள நினைந்தடியேன் உனை
நித்தலுங் கை தொழுவேன்
வாளன கண்மடவா ளவள்
வாடி வருந்தாமே
கோளிலி எம் பெருமான் குண்டை
யூர்ச்சில நெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம் பெருமான் அவை
அட்டித் தரப்பணியே

## திருவாசகம்

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப் போந்த அன்றுமுதல் இன்று வரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்குப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே என்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே

## திருவிசைப்பா

*தலம்:- கோயில்* *பண்:- பஞ்சமம்*

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

*தலம்:- கோயில்* *பண்:- பஞ்சமம்*

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஆதியாய் நடுவும் ஆகி
அளவுஇலா அளவும்ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித்
தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா வேத மாகிப்
பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப்
பொதுநடம் போற்றி போற்றி.

## திருப்புகழ்

எழுகடல் மணலை யளவிடி னதிக
மெனதிடர் பிறவி - அவதாரம்
இனியுன தபயம் எனதுயி ருடலு
மினியுடல் விடுக - முடியாது
கழுகொடு நரியு மொபுவி மறலி
கமலனு மிகவு மயர்வானார்
கடனுன தபய மடிமையு னடிமை
கடுகியு னடிகள் - தருவாயே
விழுதி ழழகி மரகத வடிவி
விமலிமு னருளு - முருகோனே
விரிதல மெரிய குலகிரி நெரிய
விசைபெறு மயிலில் - வருவோனே
எழுகடல் குமுற அவுணர்க ளுயிரை
யிரைகொளும் அயிலை - யுடையோனே
இமையவர் முனிவர் பரவிய புலியூ
ரினில் நடமருவு பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க! மலிவளம் சுரக்க! மன்னன்
கோன்முறை அரசு செய்க! குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்

# நவக்கிரக தோத்திரம்

### காப்பு

மண்ணிலுயிர் கட்கனைத்து
மாறா தளித்து நல
நண்ணு நவக்கிரக நண்பு
சொலத் - தண்ணிலவு
திங்களணி தங்குமுயர்
செங்சடைய ருண்மகிழ் செய்
கங்கையரு ளைங்கரனார்
காப்பு

### சூரியன்

காசினியிருளை நீக்குங்
கதிரொளி யாகியெங்கும்
பூசனை யுலகோர் போற்றப்
புசிப்பொடு சுகத்தை நல்கும்
வாசியே ழுடைய தேர்மேல்
மகாகிரி வலமாய் வந்த
தேசிகா வெனைரட் சிப்பாய்
செங்கதி ரவனே போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சந்திரன்**

அலைகட லதனி னின்று
மன்றுவந் துதித்த போது
கலைவளர் திங்க ளாகிக்
கடவுள ரெவரு மேத்துஞ்
சிலைமுத லுமையாள் பங்கன்
செஞ்சடைப் பிறையாய் மேரு
மலைவல மகா வந்த
மதியமே போற்றி போற்றி.

**செவ்வாய்**

வசனநற் றைர்யத் தோடு
மன்னவர் சபையில் வார்த்தை
புசபல பராக்ர மங்கள்
போர்தனில் வெற்றி யாண்மை
நிசமுட னவர வர்க்கு
நீணிலந் தனில ளிக்குங்
குசனில மகனாஞ் செவ்வாய்
குரைகழல் போற்றி போற்றி.

**புதன்**

மதனநூல் முதல நான்கு
மறைபுகழ் கல்வி மானம்
விதமுட னவர வர்க்கு
விஞ்சைக ளருள்வோன் றிங்கள்
சுதன்பசு பாரி பாக்கியஞ்
சுகம்பல கொடுக்க வல்லான்
புதன்கவி புலவன் சீர்மால்
பொன்னடி போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### குரு

மறைமிகு கலைநூல் வல்லோன்
வானவர்க் கரசன் மந்தரி
நறைசொரி கற்ப கப்பொன்
னாட்டினுக் கதிபனாகி
நிறைதனஞ் சிவிகை மண்ணி
னீடுபோ கத்தை நல்கு
மிறையவன் குரு வியாழ
னிருமலர்ப் பாதம் போற்றி

### சுக்கிரன்

மூர்க்கவான் சூரன் வாணன்
முதலினோர் குருவாய் வையங்
காக்கவான் மழைபெய் விக்குங்
கவிமகன் கனகமீவோன்
றீர்க்கவா னவர்கள் போற்றச்
செத்தவர் தமையெழுப்பும்
பார்க்கவன் சுக்கிரன் ரன்றன்
பாதபங் கயங்கள் போற்றி.

### சனி

முனிவர்க டேவ ரேழும்
மூர்த்திகள் முதலி னோர்கள்
மனிதர்கள் வாழ்வு முன்றன்
மகிமைய தல்லா லுண்டோ
கனிவுள தெய்வ நீயே
கதிர்சேயே காக மேறுஞ்
சனியனே யுனைத் துதிப்பேன்
றமியனேற் கருள் செய்வாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இராகு

வாகுசேர் நெடுமான் முன்னம்
வானவர்க் கமுதமீயப்
போகுமக் காலை யுன்றன்
புணர்ப்பினாற் சிரமே யற்றுப்
பாகுசேர் மொழியாள் பங்கன்
பரன்கையில் மீண்டுபெற்ற
ராகுவே யுனைத் துதிப்பேன்
ரட்சிப்பாய் ரட்சிப்பாயே.

### கேது

பொன்னையி னுரத்திற் கொண்டோன்
புலவர்தம் பொருட்டா லாழி
தன்னையே கடைந்து முன்னந்
தண்ணமு தளிக்க லுற்ற
பின்னைநின் கரவா லுண்ட
பெட்பினிற் சிரம்பெற் றுய்ந்தா
யென்னையாள் கேது வேயிவ்
விருநிலம் போற்றத் தானே.

### பொது

சூரியன் சோமன் செவ்வாய்
சொற்புதன் வியாழன் வெள்ளி
காரியு மிராகு கேது
கடவுள ரொன்பா னாமத்
தாரிய் சக்க ரத்தைத்
தரித்திரர் பூசித் தாலும்
பாரினிற் புத்திர ருண்டாம்
பாக்கிய நல்குந் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியின் வழியில்.....

தெங்கும் மாவும் தேன்சொரி தருக்களும்
எங்கும் நிறைந்த எழிலுடன் பயன்தரு
மங்காத பெயருடை மீசாலைப்பதியினில்
துங்கக் கரிமுகனை கண்டுவில் அம்பிகையை
என்றும் ஏத்தி வழிபட்ட அடியவன்
குன்றாத உற்சாகம் கொண்ட விவசாயி
சுந்தரம் என்னும் மார்க்கண்டு அவனும்
அந்த நாளினில் துணைவி மணியெனும்
செல்லப்பெயருடைய இராசமணியோடு
செய்திட்ட பேறதால் வந்தவர் இருவர்.
மூத்தவள் நல்லாள் **ஸ்ரீரஞ்சனா** பின்
வந்து பிறந்தவன் **ஸ்ரீரவிகுலன்** அவன்
பிறந்த போதினில் பெற்றவள் போய்விட்டாள்
அற்றை நேரமே தாய் முகம் காணாத
இத்தவக் குழந்தைக்கு தாயாய் தாதியாகி
பசிதுயர் போக்கி நோய் பிணி நீக்கி
கண்ணும் கருத்துமாய் காத்து வந்தவள்
கதிராசி மகராசி சிறிய தாயாராம்.

இந்நிலை தொடர இரு மகவுக்குமாய்
ஏற்றதாய் வேறெங்கும் கிடைக்கவே மாட்டாள்
சுந்தரம் தனித்து வளர்க்கவே முடியாது
இதற்கெல்லாம் விடிவு உண்டாகும் என்று
கதிராசிப்பிள்ளை பொருத்தமாம் என்று
பெரியோர் திருமணம் செய்தே வைத்தனர்.
அக்காவின் பிள்ளைகள் தன் பிள்ளையேயென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலம் தொடங்கி கண் விழித்தாள் கதிராசி.
ஈ, எறுப்பு கடிக்காமல் இழித்தொருவர் பேசாமல்
ஆன பணியெலாம் அன்புடனே செய்திருக்க
குறையொன்று பிற்காலம் வந்திடவே கூடாது
கறைமிடந்தாள் அருள் செய்ய கலைவாணன் பிறந்தானே.
மூவர் மக்களென ஆவல் மிக்க செயல்
தேவைகள் அறிந்து சிறப்புடனே செய்திடவே
மூத்தவள் பக்குவமடைந்து சில நாளில்
காத்திருக்காமல் காலன் கொண்டேகி
கவன்றனர் இடிந்தனர் துயரம் மிக்கவே.

காலம் உருண்டது மகன்மார் இருவரும்
காளைகள் வயது வந்திட நாட்டினில்
பாதுகாப்பற்ற சோதனை பெருகி
மூத்தவன் ரவியும் இந்தியா சென்று
வர்த்தகத் தொழிலை மேம்படச் செய்து மேல்
சவுதி சென்று அயராது உழைக்க
இளையவன் வாணன் U.K சென்று
இணைந்தனன் அங்கே உழைப்பும் கண்டனன்.

ஆண்டுகள் மூன்று அரேபிய மண்ணில்
அம்மா அப்பா சொந்த மண்ணினில்
எண்ணிப் பார்த்த மூத்தவன் ரவியும்
மீண்டும் ஊரிற்கு வந்துமே சேர
ஏரம்ப மூர்த்தியாம் சங்கீத பூசணம்
தங்கம்மா மாமியின் பிள்ளையாம் மைத்துனி
நாட்டியக்கலைமணி விமலகுமாரியை
கூட்டவே மாங்கல்யம் திருமணம் பேசினர்.

இருமனம் ஒப்ப திருமணம் கண்ட
ரவியும் நாட்டினில் தங்கியே நின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுவிலில் வர்த்தகக் கடையொன்று திறந்து
ஈட்டினர். பொருளும் குடும்பம் செழிக்கவே
காலங்கள் ஓடிட கண்மணி என்றிட
கிரிபரன் ஜெனார்த்தனன் பிரணவன் என்று
புத்திரர் பிறந்திட மகிழ்ந்தனன் ரவியும்
துணைவி விமலாவும் ஆசிரியை ஆகிட
துணையாய் பிள்ளைகட்கும் உறுதுணையாக
வீட்டுக்கருமத்தில் வெளிக்கருமத்தில்
காட்டினன் ரவியும் மிகவும் ஊக்கமாய்.

வெளிநாட்டிலிருந்து வந்தாலும் ரவியும்
உள்நாட்டில் காணி பூமி வயலும் பார்த்து
ஒரு நேரமும் சோம்பலை அறியாது அயராது
உழைக்கும் பான்மை ஊரே பேசும்.
வீட்டைக் கட்டி மாட்டைக்கட்டி
வீண் நேரம் பொழுது போக்காமல் சேவையாய்
கன்னியர் பலருக்கு வரன்களைத் தேடி
களிப்புடன் திருமணம் செய்திடு பணியாய்
உள்நாடுகளிலும் வெளிநாடுகளிலுமாய்
பலரும் வாழவும் வாழ்த்தவும் வாழ்ந்தவன்.
பிள்ளைகள் கல்வியில் நாட்டம் கொள்ளவும்
எள்ளளவும் தன் பணி குறையா விதமாய்
ஓடி ஓடி உழைத்தும் பெற்றோர்
உடல் நல சுகங்கள் குறை நிறை பார்த்தும்
காலங்கள் கடந்தது. ஆண்டு நாற்பத்தாறு
சாலவே சிறப்புடன் போயின என்ன
புதுவருடம் அது விகிர்தி பிறந்தது.
போயினன் துணைவி நாட்டிய நிகழ்வென
காட்சியில் அது போனது
அன்று காலையில் கோலம் போட்டவன் மெழுகி
பானையில் பொங்கி படைத்துக் கொடுத்து
பிள்ளைகள் வருடம் கொண்டாட எல்லாம்
நிறைவுறச் செய்து வெளிச் சென்றவனாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கமாய் மோட்டார் சைக்கிளில் ஏறினால்
யாழ்ப்பாணம் கொக்குவில் கோண்டாவில் அலைந்து
விரைந்து மாலை திரும்பி வந்துமே
மாடு கன்று வைக்கோல் தவிடு
பால் எடுத்து பதமாய்க் கொடுப்பவன்
வேகம் அதிவேகம் எல்லோரும் சொன்னாலும்
தன்வேகம் குறையாத தன்மை கொண்டவன்.

ஏலவே கண்ணீறு பட்டதோ அன்று
விகிர்தி பிறந்தது அமாவாசை இருளுடன்
கூடவே கூற்றுவன் எதிர்மறித்தானோ
தாய் தந்தை மனை சென்று தங்கி திரும்பிடவே
ஏன் வந்து மோதியது இரு சில்லு வாகனம்
எச்சரித்து போதெல்லாம் ஒரு நாள் தானென்று
என்தனையோ பேருக்கு மறுமொழி சொன்னானே
அகன்ற தார் வீதி ஆனால் கச இருளாய்
மண்டிக்கிடந்திடவே, மறைந்திருந்த காலனவன்
கால நேரம் சரியென்று கடுகி வந்தனனோ
பால் தந்து நீ வளர்த்தாய் பாசம் மறக்கவில்லை.
நேசமுடைப் பிள்ளைகளை நினைத்து வேகமாய் போய்
கைவிசேசம் கொடுத்தொருக்கால் கண் நிறைந்த மக்கள் முகம்
பார்த்து வந்து சாப்பிடுவேன் என்று டச்சு வீதி வர
தடுத்ததொரு விதியொன்று தாரமது தான் தனிக்க
தண்ணீர் என்று கேட்கவில்லை தலையிடியும்
சொல்லவில்லை
மின்னலென வேகமதாய் முழக்க மொன்று மில்லாமல்
என் நினைந்து போனீரோ ஏங்கித் தவிக்கின்றோம்
என்னினைந்தும் ஆறவில்லை விதியின் சதி வழியில்"

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா...

தாய் முகம் காணாத நீ ஒரு கால் கோணாமல்
தாயெனக்கு அன்பு செய்த மூத்த முத்தே - ரவி மகனே
போய்விட்டியோடா கடைசி நேரம் வந்து விட்டு
புறப்பட்ட வழியிலே அழைப்புனக்கு வந்ததுவோ
எங்கள் காலம் மங்கும் வரை எங்கள் முன்னே இருப்பாயென்று
தம்பி நாங்கள் ஏமாந்தோம் நம்பி நடுத்தெருவில் விட்டு விட்டு
எங்கேயடா போனாய் நீ என்ன குறை நாம் செய்தோம்.
பொங்கல் மீதி பானையிலே காத்திருக்கப் பறந்ததென்ன?

## அப்பா...

நோய் வந்து சேர்ந்ததென்று மனம் கலங்கவில்லை.
நீ இங்கு இருந்ததனால் நோய் வலியும் தெரியவில்லை
யாருதவி இனி எமக்கு பாருலகில் நாம் வாழ
நீ இன்று எமை விட்டு நீண்ட தூரம் சென்றதென்ன?
நீ எனக்குக் கொள்ளி வைப்பாய் என்று நான் இது வரையும்
கற்பனையில் நான் கொண்ட எண்ணமெலாம் கொள்ளி வைத்தாய்
பெற்ற பிள்ளை நீ எந்தன் முன்னே காற்றாய்ப் பறந்துவிட
உற்ற தென்ன கொடுமை எப்படி நான் ஆறுவேன்.

## சகோதரன் வாணன்...

மூவர் நாம் சகோதரராம் முன்னவளும் போய் விடவே
நாம் இருந்து பெற்றோர் குறை தீர்ப்போமென்று
நீ இருந்து அருகினிலே பெற்றோர் கடன் தீர முன்னே
கிட்ட நான் இருந்திருந்தால் பட்டெனவே குதித்திருப்பேன்
எட்டினாலும் எரிமலை தான் வெடித்ததனால் நடை ஆச்சே
இப்பிறப்பில் நீ அண்ணன் உன் முகத்தை கடைசியிலே
பாராமல் போனாலும் மறு ஜென்மம் காத்திருப்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியமான மனைவி...

பல்கலைக் கழகப் பட்டப் படிப்பினில்
இடையில் தான் எங்கள் திருமணம் நடந்தது
இறுதி வருடம் அவைக்காற்றுகை நிகழ்வு
அரங்கிற்கு அடி வைக்க ஆவலுடன் செய்தியது
ஆற்றுகைக்கு ரவிதானும் கொழும்பிலிருந்து வருவாராம்
தேடுகிறேன், தேடுகிறேன் துலாவித் தேடுகிறேன்
"வருவேன் வருவேன் என்று வாக்குறுதியளித்த
வடிவேலன் வருவாரோடி"

பல வித அபிநய பாவங்களை காட்டுகையில்
சபையின் நடுவே என் வடிவேலனைக் கண்டு
மனம் மிக மகிழ்ந்ததை மறக்கத்தான் முடியுமோ
பள்ளிக்குப் போய் நான் பாடம் புகட்டினேன் தான்
எள்ளத்தனையும் வீட்டுப் பொறுப்புத் தெரியாது
மா அரிசி இருக்கோ பருப்பிருக்கோ நெய் இருக்கோ
தூள் உப்பு ஏதேனும் முடிந்தே தான் போயிட்டதோ
எனக்கெதுவும் தெரியாமல் எல்லா அலுவல்களும்
எங்களைப் பள்ளிக்கு அனுப்பிய பின் செய்வாரே
இங்கு பாலர் பசி போக்கி பாதுகாப்பாய் நானிருந்து
ஏங்கி ஏங்கி வாடிடவோ என்னை விட்டுத் தனிச்சென்றீர்

புதுவருடம் விடியுமுன்னே நிகழ்வு செய்ய (கொண்டு)
நான் செல்ல
பொங்கிப் படைத்து பிள்ளைகட்குத் தான் கொடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரம் அவசரமாய் அன்றும் வெளிக்கிட்டு
எங்கே போனீர் இங் எனக்குச் சொல்லாமல்
வந்த வழியினிலே அடிபட்ட செய்தி கேட்டு
துடி துடித்து வந்தேனே காயம் என்ன மாயம் ஐயா!
ஒருவரும் அந்நேரம் உதவி செய்வார் இல்லாமல்
கடும் இருளில் அடையாளம் காணாமல் போனாரோ
பதறிப் பதறி நான் கதறி அழுதெழுப்ப
எதுவித உணர்வுமே இல்லாமல் கிடந்தீரே
கடைசியிலும் எனக்கொரு மறுமொழி சொல்லாமல்
கடிது நீர் விரைந்த கொடுமை கொடுமை ஐயா!

## பிள்ளைகள்...

ஏனப்பா உங்களுக்கு என்ன கரைச்சல் தந்தோம்
சொல்வழி கேட்காமல் சோம்பித் திரிந்தோமோ
போனவழி சொல்லாமல் பொய்பேசி மறைந்தோமோ
கல்வி கற்க பள்ளிக்குக் கொண்டு சென்று விட்டீர்
காத்திருந்து கூட்டி வந்து களைப்பினைப் போக்குவீரே.
கல்வியில் நாம் உயர காலடி எடுத்து வைக்க
காத்திராமல் கடுகதியாய் காலன் பறித்ததென்ன
காலம் எல்லாம் புதுவருடம் எங்கள் கண்களில் நீர் மல்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்றார் உறவினர்...

மாட்டுக்குத் தீனி வைப்பாய் வீட்டுக்கு மா எடுப்பாய்
வயல் வேலை தொடங்கி விட்டால் மாடாக நீ உழைப்பாய்
றோட்டிற்கு நீ வந்தால் இருது மன்னன் (சாரதி)
தேரினைப் போல்
என்ன வேகமையா ஏனிந்த அவசரமோ?
ஆறுதலாக நடந்து அறியமாட்டாய் நீயும்
அவசரமாய் ஓரிரு கதை சொல்லி முடிப்பாயே
காலையிலே பொங்கல் வைத்தாய் - கடுதியாய்ப்
புறப்பட்டாய்
மாலையிலே திரும்பாமல் மறைந்ததென்ன மாயம் ஐயா?

## மீசாலை வெள்ளை மாவடி விநாயகர்
## ஆத்ம சாந்தி வேண்டுதல்

மா நெல்லி வேம்பகைந்து பாமாலை பாடியவர்
நீர் அசைந்து ஆடி வரும் ஆனந்தக் காட்சியென்ன

மாவடி விநாயகனே மீசாலை உறைபவனே
சேவடி துதித்தார்க்கு திருவருள் செய்பவனே

எந்த வேளையிலும் எது கருமம் செய்தாலும்
உன்னை நம்பியங்கே உன்னடிக்கே வந்து சொல்லி
உனதருளைக் கேட்டவனாம் ரவிகுலன் சாந்தி பெற
ஐங்கரனே பெருமானே ஆத்ம சாந்தி அருள்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குல தெய்வங்கள் கண்டுவில், கண்ணகை, மனோன்மணி தெய்வங்களிடம் ஆத்ம சாந்தி வேண்டுதல்

சோலை சூழ்ந்திருக்க சுடர்க் கொடியே சுந்தரியே
பால் சொரிந்து நெய் சொரித்து பார்த்த விழிநீர் சொரிந்து
காலமெல்லாம் அபிஷேகம் கண்ணகியே மனோன்மணியே
சாலவே வணங்கினானே குல தெய்வம் நீ விர் என்று
போனவழி உன் வீதி வந்து சேரும் என்றெண்ணி
நேர்வழியில் மோட்டார் சைக்கிள் ஓட்டி வந்தானே
தார் றோட்டில் நடுவழியில் நீ மறித்து ஏற்றனையோ
சீர் மிகுந்த திருவருளால் ஆத்ம சாந்தி அருள்வாயே.

## சாந்தி கொள்வோம்

தந்தையார் தாயார் உடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாத்தா மாரே
வந்தவா றெங்ஙனே போமோ றேதோ
மாயமா மிதற்கேதும் மகிழ வேண்டா
சிந்தையீர உமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ் மதியும் வாளரவும் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சிவாய
என்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்க லாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால் வந்துதவுவார் ஒருவரில்லை
சிறு விறகால் தீ மூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்தன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்ல கண்டங் கொண்டடியேன் என் செய்கேனே.

## தேற்றம்

மானிலத்தில் பிறக்கும் மனிதரெல்லாம்
மலரயன் கணக்கில் வாழ்நாள் முடிந்தால்
ஊனுடல் விட்டு விண்ணுலகு செல்வார்
உண்மையிது என்பதை யாவருமே அறிவோம்
ஈனமிலாச் செயல்களினால் உயர்வை அடைவோம்
இறைவனது திருவடியை உள்ளத்தில் கொள்வோம்
வாழ்வில் என்றும் மனச் சாந்தி பெற்று வாழ்வோம்

*ஓம் சாந்தி!     ஓம் சாந்தி!!     ஓம் சாந்தி!!!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானம் இனியது, மாநிலம் இனியது
மக்களும் இனியரே
ஆனபோ தினிலும் இறப்பதும் பிறப்பதும்
ஆண்டவன் விதிப்படியே.

ஆக்கமும் அழிவும் உலகத்தியற்கை
ஆர் இதை விலக்கவல்லார்?
போக்கும் வரவும் புரிபவன் இறைவன்
பொய்மையே இவ்வுடலம்.

தூலம் அழிவது சூக்குமம் நிலைப்பது
சோர்வது நம்மடமை
காலம் அனைத்தையும் ஆற்றிடும் மருந்து
கடமையைச் செய்தல் நலம்.

உடலமே அழியும் உயிர் அழியாது
உண்மையை ஓர்ந்திடுவோம்
திடமதாய் நாமும் போய்விட நாள்வரும்
செய்திருப்போம் கடமை.

*ஓம் சாந்தி!* *ஓம் சாந்தி!!* *ஓம் சாந்தி!!!*

**-தமிலைத் துமிலன்-**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியும் சதியும்

பல்லாயிரம் மைல்களைக் கடந்து அந்நிய தேசத்தில் அந்நியமொழி, கலாச்சாரங்கட்கு இடையில் நாம் வாழ்ந்தாலும் எங்கள் சிந்தனைகளில் நம் ஊர் நம் உறவுகள் சொந்தங்கள் பற்றியதாகவே இருக்கும்.

இவ்வகையில் எம் சகோதரிகள் திருமணங்கள் எல்லாவற்றிலும் நாம் நேரடியாகப் பங்கு கொள்ளா முடியாவிட்டாலும் கற்பனையிலும் பின் தொலைக்காட்சியிலும் பார்த்து மகிழ்ந்தோம்.

இன்று அமரராகிவிட்ட திரு. ஸ்ரீரவிகுலன் (ரவி) முன்பேயே எங்கள் நெருங்கிய உறவினர். மைத்துனர். எனவே இத்திருமண சம்பந்தமாக எங்கள் உறவுகள் இன்னும் பலப்பட்டதாக நலம் மகிழ்ந்திருந்தோம்.

அந்நிய தேசத்தில் வாழும் எங்கள் சரீர உதவிகளை விட மைத்துனர் மூவர்கள் சரீர உதவிகள் என்றும் இருக்குமே என்ற துணிவும் நம்பிக்கையுடனும் வாழ்ந்திருந்தோம். ஒரு கூட்டுக் குருவிகளாக வாழ்ந்திருந்த நாம் சகோதரர் நலன்களில் கஷ்ட நஷ்டங்களில் பங்கு கொள்ளாமல் இருக்கமுடியாது.

விஞ்ஞானம் எவ்வளவோ வளர்ச்சியடைந்து விட்டது தான் ஆயினும் இறந்தவரை உயிர்ப்பிப்பது குருதியை உற்பத்தி ஆக்குவது வரையில் விஞ்ஞானத்தில் ஒன்றும் செய்ய முடியவில்லையே

ரவிக்கு நடந்த சம்பவத்தில் ஊரிலேயே ஒருவராலும் உதவிட முடியாமல் போன சந்தர்ப்பத்தில் தூர வாழ்ந்து கொண்டிருக்கும் எம்மால் உயிரை எவ்வாறு காத்திட முடியும். "ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடாதாரே" எனும் பாடலுக்கு ஏற்ற ஆடல் வல்லான் செய்த சதியே விதி என நோவதைத் தவிர யாரை நொந்தும் பயன் இல்லை.

துன்பங்களையும் துயர்களையும் தாங்கும் வல்லமையை இறைவன் நொந்த எல்லா உள்ளங்கட்கும் அருளவும் ரவியின் ஆத்மா சாந்தி பெறவும் வேண்டி நிற்கும்

**இளங்கோ – இளமுருகன்**

மைத்துனர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்பண்புள்ள அமரர் ஸ்ரீரவிகுலன்

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி விமலகுமாரி ஸ்ரீரவிகுலன் அவர்களின் அன்புக் கணவர் அமரர் மார்க்கண்டு ஸ்ரீரவிகுலன் அவர்களின்திடீர் மறைவுச் செய்தியை அறிந்து மிக அதிர்ச்சியடைந்தோம். இந்தப் புத்தாண்டின் உதயத்தில் இப்படியொரு அவலம் நடைபெற்றமை எண்ணிப்பார்க்க இயலாததுன்பமாகும். தனது பெற்றோர், மனைவி மக்கள் மீது அன்பும் பாசமும் கொண்ட அமரர் தனது அன்றாடக் கடமைகளை ஆற்றிய வேளையில் வீதியில் ஏற்பட்ட வாகன விபத்து வாழ்வின் எல்லைக்கு கொண்டு சென்றதை நினைக்கும் போது மிகவேதனையாக உள்ளது.

எங்கள் சமூகம் மனித விழுமியங்களில் தவறியுள்ளமை இவ்விழப்பில் தொக்கிநிற்கின்றது. வீதிப் போக்குவரத்து விதிகளை அனுசரிக்காமை, விபத்தில் சிக்கியவரை காப்பற்றுவதற்கான மனஉறுதி அல்லது விருப்பம் குறைந்த தன்மை, சம்பவத்தை உரியவர்களுக்கு அறிவிக்கும் மனப்பாங்கு ஆகியன மேலோங்கியிருந்தால் இவ் இறப்பைத் தவிர்த்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது.

வாழ்வு நிலையில்லாதது, பிறந்தவர் என்றோ ஒரு நாள் இறப்பது நியதி என்பது உண்மை. ஆயினும் மனிதன் தனது வாழ்வின் சில கடமைகளை நிறைவேற்றி தனது குடும்பத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகளை நிறைவேற்ற வேண்டிய நிலையில் அகாலச் சாவடைந்து குடும்பத்தவரையும் சமூகத்தவர்களையும் மீளாத்துயரில் ஆழ்த்துகின்றது.

அமரர் சமூகத்தில் மதிப்புடன் வாழ்ந்தவர். தனது குடும்பத்தவர்களுடன் இன்பமாக இருந்தவர். தனது பிள்ளைகளை நல்ல அறிஞர்களாக, சமூக அந்தஸ்துள்ளவர்களாக மாற்ற முயற்சித்தவர். இவரது துணைவியார் கல்லூரியில் மதிப்பாக தனது கடமைகளைச் செய்து வருபவர். மாணவர்களின் அபிமானத்தைப் பெற்றவர். இவரது குடும்பத்தவர்கள் குறிப்பாக துணைவியாரின் சகோதரர் ஏழை மாணவர்களின் கல்வி முயற்சிக்கு உதவி வருபவர்.

இவ்விதமான நல்லெண்ணமுள்ள மதிப்பாந்த குடும்பத்துக்கு ஏற்பட்ட இவ் இழப்பானது எமக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்துகின்றது. அமரரின் குடும்பத்தினரது துயரில் பங்கு கொள்வதுடன் அவரின் ஆதம்சாந்திக்காக எல்லாம் வல்ல மாவடிவிநாயகனின் பாதக்கமலங்களை வணங்குகின்றேன்.

09.05.2010

**அ. கயிலாயபிள்ளை**
அதிபர்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
(தேசிய பாடசாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ ஆஞ்சநேய கவசம்

அஞ்சனை மைந்தா ஆஞ்ச நேயா
ஆற்றல் தேவா காற்றின் செல்வா
இசையில் மயங்கும் இங்கித வடிவா
ஈடிணை யில்லா ஈசன் புதல்வா

உத்தம சீலா உயர்வா னரமே
ஊகம் நிறைந்த ஏகசுந் தரனே
எதையும் முடிக்கும் கதைகொண் டவனே
ஏவும் கணைபோல் தாவும் பரனே

ஐரா வதம் போல் வலிவா னவனே
ஒன்றாய் பலவாய் உருவெடுப் பவனே
ஓயுத லின்றி உதவிடும் குணபா
ஔவிய மகற்றி அருள்தரும் மகிபா

எஃகார் மனதில் இடம்கொள் பவனே
எளியேன் சரணம் சரணம் சரணம்
சரணம் சரணம் சத்திய விரதா
சங்கர சொரூபா சரணம் சரணம்

பேரறி வாளா பிரமச் சரியா
ஆரா வமுதன் அகம்சே ரழகா
தன்பல மறியா தவப்பிர காசா
நன்மனத் துறையும் நல்லனு மானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனைக்குரிய வளர்மணித் தேவே
சுந்தர காண்டச் சுடர்மணித் தேவா
சசிவோத் தமனே சஞ்சீ விராயா
வசிகர வடிவா வாயுகு மாரா

அடியேன் சரணம் சரணம் சரணம்
அடியார் தமக்குப் பாடம் புகட்டும்
துணிவே துணிவே துணிவே துணிவே
துணையே துணையே துணையே துணையே

கணமே கணமே கணமே கணமே
நினைவாய் நினைவாய் நினைவாய் வருவாய்
மரணம் அணுகா மந்த்ர விலாசா
கரணம் கடந்த கவிகுலத் திலகா

சீருப காரா சிந்தனை யாளா
மாருதிச் செல்வா மனரட் சகனே
வருவாய் வருவாய் வல்லமை வீரா
அருள்வாய் அருள்வாய் கவசம் கவசம்

கதிரவன் தன்னைக் கனியாய்க் கருதி
மதிமயங் கியவா மங்கள ரூபா
தோத்திரப் பிரியா சாத்திரத் தலைவா
நேத்திர மணியா நேர்மை நிலையா

சுக்ரீ வனுக்குச் சூக்குமம் அருளப்
பக்கத் துணையாய்ப் பரிமளித் தவனே
வாலி தன்னை வதம்புரிந் திடவே
சீலன் இராமனை தேர்ந்தெடுத் தவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூகம் நிறைந்த யுகக்கீர்த் தியனே
ஆகமம் அறிந்த அறிவா லயனே
கடல்கள் கடந்து கணையா ழி(ய) தனைத்
தடமாய்ச் சீதை யிடம்சேர்த் தவனே

ஸிம்ஹிகை தன்னை ஹிம்சித் தவனே
சம்பு மாலியை சம்கரித் தவனே
இலங்கினி யாளை உறங்கிட வைத்து
இலங்கை நகரை அதம்புரிந் தவனே

கால நேமியின் கதைமுடித் தவனே
கால மறிந்து வாலசைப் பவனே
துன்முகன் தன்னைத் துண்டா டியவா
பன்முறை யாகப் பலம்காட் டியவா

சுவயம் பிரபைக் கபயம் தந்துப்
பலமுடித் தவனே பவனகு மாரா
மாலினி தன்னைப் பாலித் தவனே
நீல வண்ணன் நிழல்போன் றவனே

அயிரா வணனை அடக்கிய வீரா
மயிரா வணனை மடக்கிய வீரா
இந்திர ஜித்தின் இரும்புப் பிடியில்
தந்திர மாகத் தப்பித் தவனே

விஞ்சிடும் புகழால் வீறுகொண் டவனே
தஞ்சம் புகும்நன் னெஞ்சுறை பவனே
அட்சயம் உடலை அணுவணு வாக
வெட்டிச் சாய்த்த வீரனு மானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக வருக வரகுண சீலா
தருக தருக துணிவும் தருக
பார்த்தன் கொடியில் பாங்காய் மிளிர்ந்த
கூரறி வாளா குங்கும வதனா

இலக்குவன் தானும் பிழைத்திட வேண்டி
மலையொடு மூலிகை தனைக்கொணர்ந் தவனே
வீடணன் தனக்கு நாடளித் தவனே
கூடி வாழும் குணம்கொண் டவனே

துவாபர பீமா துணிவே சரணம்
அவாவினை யகற்றும் அனுமா சரணம்
ராம நாமம் ரட்சக மந்திரம்
ஆமென் றுணர்த்திய அதிசய பாலா

ஏழிசை நிதியே எதிர்வந் தருள்க
ஆழியைக் கடந்தோய் அவசரம் வருக
நவகோள் களினால் நலிகள் வராமல்
சிவபுத் திரனே காத்திட வருக

பில்லி சூனியம் ஏவல் பேயால்
தொல்லையு றாமல் தடுத்திட வருக
தலைமுதல் கால்கள் நிலைகுலை யாமல்
கலைகற் றவனே காத்திட வருக

அரணை பூரான் அரவம் இவற்றால்
சிரமம் பெறாமல் காத்திட வருக
சிங்கம் கரடி புலிகள் போன்றவை
எங்களைக் கண்டு மிரண்டிடச் செய்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழ்மை நிலையால் இகழ்ச்சியு றாமல்
வாழும் முறையை உணர்த்திட வைப்பாய்
நீரில் வானில் நிலத்தில் செல்லும்
போதில் துணையாய் வருவாய் தேவா

ஒருமை மனதால் உன்றனைத் துதித்த
அருமை மனதை அளித்திடு தேவா
அகந்தைக் கிழங்கின் அடிவே ரறுத்துப்
பதமாய் வாழும் பான்மை யருள்வாய்

ஐம்புல வெறியால் அவதியு றாமல்
ஐயா நீயும் அமைதி யருள்வாய்
உள்ளும் புறமும் கள்ளம் ஒழித்து
வெல்லும் ஆற்றலை விரும்பி யருள்வாய்

எப்பிழை புரினும் என்பால் இரங்கி
அப்பிழை மீண்டும் புரியா நெறியில்
காத்திடு தேவா காற்றின் புதல்வா
மாத்திறம் வாய்ந்த மாருதி செல்வா

ஜெம் ஜெம் ஜெம் ஜெம் ஜெம் ஜெம் ஜெம்
ஜெம் ஜெம் ஜெம் ஜெம் ஜெம் ஜெஸ்வாகா
ஓம் ஹ்ரீம் வசிய ஓம் ஹ்ரீம் வசிய
ஓம் ஹ்ரீம் வசிய ஒய்யார வீரா

கத்தி கேடயம் கதைபர சுடனே
குத்தும் சூலம் கூர்வா ளேந்தி
பஞ்ச முகமாய்ப் பளிச்சிடும் தேவா
அஞ்சே லென்றே அபயம் அருள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்கரம் சுழற்றிச் சடுதியில் வருக
திக்கெல்லாம் நடுங்கத் திடுமென வருக
விண்ணில் நீந்தி விரைவாய் வருக
மண்ணில் இறங்கி மகிமையும் தருக

எங்கெங்கே நான் இருந்திடும் போதில்
அங்கங்கே நீ அருள்செய வருக
உன்னை விட்டால் உலகமும் இல்லை
உன்னை விட்டால் உறவெனக் கில்லை

உடலும் உள்ளமும் உறுதி பெறவே
தடமாய் அமைவாய் தாண்டவச் செல்வா
பிரமச் சரியா பெருந்தகை யாளா
பரமன் வடிவா பார்த்தன் துணைவா

சரணம் சரணம் சரணம் சரணம்
சஞ்சீ விராயா நீயே கவசம்
கவசம் கவசம் கவசம் கவசம்
காலந் தோறும் நீயே கவசம்

சக்தி தாசன் சொல்லிய கவசம்
சக்தி கவசம் சத்திய கவசம்
ஒருமன தாக இதனைச் செபிப்போர்
இருவினை தீரும் இன்பம் கொடுக்கும்

பிணிகள் விலகும் பெருமை சேர்க்கும்
அணிகள் செல்வம் ஆயுளும் வளரும்
கல்வி பெருகும் கர்மம் தொலையும்
பல்வகை வளமும் பாங்காய்ச் சேரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துருவம் கோட்டை அருமை அனுமன்
இருளைப் போக்கி இதமும் அருள்வான்
தசரத ராமன் தளிர்ப்பத நிழலில்
அசையா வண்ணம் நிறுத்திட வைப்பான்

ஜெய ஜெய ராம் ராம் ஜெய ஜெய ராம் ராம்
ஜெய ஜெய ராம் ராம் ஜெயமா ருதியே!
சரணம் சரணம் சத்திய விரதா
சரணம் சரணம் சத்துருசம் ஹாரா

சரணம் சரணம் சங்கர சொரூபா
சரணம் சரணம் மலரடி சரணம்
ஓம் ஜெய அனுமான் ஓம் ஜெய அனுமான்
ஓம் ஜெய அனுமான் ஓம் ஜெய ஓம் ஓம்!!

ஸ்ரீ ஆஞ்சநேயன் அருளடி சரணே!
சுபம்! சுபம்!! சுபம்!!!

## ஸ்ரீ ஆஞ்சநேய மங்களம்

ஜெய வீர அனுமனுக்குச் சுப மங்களம்
ஜெய ராம தூதனுக்கு ஜெய மங்களம்

ஜெய வீர அனுமனுக்குச் சுப மங்களம்
ஜெய ராம தூதனுக்கு ஜெய மங்களம்

சுக்ரீவன் தோழனுக்குச் சுப மங்களம்
ஸ்ரீ ராம பக்தனுக்கு ஜெய மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயு குமாரனுக்குச் சுப மங்களம்
அஞ்சனை மைந்தனுக்கு ஜெய மங்களம்

ஜெய வீர அனுமனுக்குச் சுப மங்களம்
ஜெய ராம தூதனுக்கு ஜெய மங்களம்

சிரஞ்சீவி அனுமனுக்கு சுப மங்களம்
தவயோக ஞானிக்கு ஜெய மங்களம்

புண்ணிய குமாரனுக்கு சுப மங்களம்
புவி காக்கும் அனுமக்குச் சுப மங்களம்

ஜெய வீர அனுமனுக்குச் சுப மங்களம்
ஜெய ராம தூதனுக்கு ஜெய மங்களம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாயி சிந்தனையின் முத்துக்கள்

- நான் எல்லோருடைய சேவகன். நீங்கள் என்ன பெயரிட்டு வேண்டுமானாலும் என்னை அழைக்கலாம். நான் பதிலளிப்பேன். எல்லாப் பெயர்களுமே என்னுடையவை. இன்னும் சொல்லப்போனால் எனக்கென்று தனிப்பெயர் ஒன்றும் கிடையாது. உங்களால் புறக்கணிக்கப் பட்டாலும், நான் உங்களுடனேயே இருப்பேன். என் பார்வையில் ஒருவர் கூட நார்த்திகர் கிடையாது. எல்லோருமே இறைவனால் இறைவனுக்காக இருந்து கொண்டிருப்பவர்கள் தாம். சூரியன் இல்லை என்று சொன்னால் சூரியன் மறைந்து விடுவதில்லை.

- அவன் அருளில் நம்பிக்கை கொள்ளுங்கள், எளியோருக்குச் சேவை செய்வதும் இறைவனின் சக்தி, பெருமை இவற்றில் திளைப்பதுமான நன்னெறிகளோடு கூடிய வாழ்க்கை நடத்துங்கள். உங்கள் கடமைகளைச் சரி வர ஆற்ற வேண்டிய பிரார்த்தியுங்கள். கட்டாயம் உங்கள் பிரார்த்தனைக்கு கடவுள் செவி சாய்ப்பார். இறைவனைப் பற்றி எண்ணங்களில் நீங்கள் காலத்தைக் கழிக்கும் பொழுது கெடுதலான வழிகளில் போவதிலிருந்து நீங்கள் விடுபடுகிறீர்கள். மற்றவர்களுக்கு எந்த வழியிலும் கெடுதல் செய்யவோ மற்றவர்களை தூற்றுவதற்கோ உங்களுக்கு சபலம் எழாது. வாழ்க்கையின் எல்லா சம்பவங்களையும் அதன் பரிசுகளாக ஏற்றுக்கொண்டு அன்பிலேயே வாழ்வீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ உங்களுக்குத் தெரிந்த உங்களிடத்தில் இல்லாத தவறுகள் பற்றி மற்றோர் எது சொன்னாலும் பொருட்படுத்தாதீர்கள். உங்களிடமுள்ள தவறுகளை மற்றோர் உங்களுக்கு சுட்டிக்காட்டுவதற்கு முன்பே சரி செய்து விட முயலுங்கள். உங்கள் தவறுகளை சுட்டுக் காட்டுபவர்கள் மீது கோபமும் பழிவாங்கும் எண்ணமும் கொள்ளாதீர்கள். அதற்காகப் பதிலுக்கு அவர்களுடைய தவறுகளை நீங்கள் சுட்டிக்காட்ட வேண்டாம்.

☞ உங்கள் நண்பர்களுக்கிடையில் விரோதமும், சண்டையும் மூண்டால் இவைகளை அதிகப்படுத்த முயலாதீர்கள். பிரியத்தோடும், அனுதாபத்தோடும் பழைய படி அவர்கள் நண்பர்களாயிருக்கச் செய்யவே முயலுங்கள்.

☞ இறைவனை மறந்து வாடியுள்ள மக்கள் மீது நாம் ஸங்கீர்த்தன கிரணங்களைப் பொழிந்து அவர்களைத் தாமரையாக மலர்வியுங்கள். பகவத்துநுபவத்துக்கு மேம்பட்ட நலன் ஏதுவுமில்லை. இதற்கு உதவுவதை விடப் பெரிய சமூகசேவை ஏதுவுமில்லை. அன்னதானம், வித்யா தானம், வஸ்திரதானம், பிணி தீர்த்தல் யாவும் நல்லவை தாம். முடிந்தளவில் அனைவரும் இவற்றைச் செய்ய வேண்டும். ஆயினும் இவற்றால் பலன் அடைபவரின் உள்ளம் உயர்ந்தாலன்றி இவையும் வீண் தான். ஆகையால் பக்தியைப் பரப்புவதை விடப் பெரிய பரோபகாரம் இல்லை.

☞ நான் எப்போதும், எப்போதும் எப்போதும் உங்களுடனேயே இருக்கிறேன். உங்களுக்கும் எனக்குமுள்ள இடைவெளி உங்கள் கற்பனையே.

☞ ஒவ்வொரு நாளையும் அன்பில் தொடங்குங்கள். அன்பில் செலவழியுங்கள். அன்போடு முடியுங்கள். ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளையும் அன்பால் முழுக்கடியுங்கள். இதுவே பகவானிடம் கொண்டு சேர்க்கும் வழி.

☞ வேதங்களில் கூறப்பட்டுள்ள பிரபஞ்சப் பிரேமையின் பராமரிப்போடு கூடிய பாதுகாப்பின் கீழ் உலக மக்கள் அனைவரையும் ஒன்று சேர்க்க முடிவு செய்திருக்கிறேன். ஏனெனில் இந்த உலகம் என் அரண்மனை. ஒவ்வொரு கண்டமும் அந்த அரண்மனையில் கூடம். பொய்மை தோல்வியுறும். உண்மை வெல்லும்.

☞ ஒரே இரத்தம் உடலின் பல பாகங்களுக்கும், எல்லா அவயவங்களுக்கும் ஓடி அவைகளைப் போஷிப்பதும் போல, ஒரே தெய்வீகத் தத்துவம் தான் பிரபஞ்சம் முழுவதையும் இயக்குகிறது. வாழ்க்கை என்னும், களைப்பை உண்டு பண்ணும் குழப்பத்தில் மூழ்கி இறைவனை அசட்டை செய்யாதே! தனிமனிதனின் வித்தியாசங்களுக்கு முக்கியத்துவம் அளிக்காதே! சகல உயிர்ப்பொருட்களும் ஒன்றோடொன்று உறவு கொண்டவை.

☞ நான் எல்லோருடையவும் சேவகன், என்னை எந்தப் பெயருடனும் அழைக்கலாம். நான் விடை தருவேன் ஏனெனில் எல்லா நாமங்களும் என்னுடையவையே...! நீங்கள் என்னை ஒதுக்கினாலும் நான் உங்கள் பின்னால் இருப்பேன். ஒரு இந்து நல்ல இந்துவாக மாறவேண்டும். ஒரு கிறிஸ்தவன் நல்ல கிறிஸ்தவனாக மாற வேண்டும். இதே போல் எல்லா மதத்தவர்களும் நீங்கள் செல்லுகின்ற பாதையைச் சீர் செய்து சரியான வழியில் அழைத்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லவே நான் வந்துள்ளேன். (சாயிபாபா)

- உங்களை நான் கவனிக்கவில்லை. என்பதாலோ நீங்கள் விரும்பும் படியே பணம், பதவி ஆரோக்கியம் சௌகரியம் முதலியவற்றைத் தராததாலோ, ஸ்வாமி அலட்சியம் செய்கிறார் என்று எண்ணாதீர்கள். உங்களிடம் ஸ்வாமிக்கு உள்ள உண்மையான கவலை உங்களுக்குத் தெரியாது. ஆனால் ஸ்வாமி உங்களை பணக்காரராக பதவிக்காரராக பாலிக்ஷ்டராக, பவிசுள்ளவராக ஆக்குவதில் கவலை கொண்டிருக்கவில்லை. உங்கள் சித்தத்தை சுத்தம் செய்து உங்களை உய்விப்பதிலேயே கவலை கொண்டிருக்கிறேன்.

- என்னிடம் அஞ்ச வேண்டாம். தயங்கவும் வேண்டாம். என்னிடம் உங்களுக்கு எல்லா உரிமைகளும் உண்டு. எனவே அன்போடு வந்து கேளுங்கள் தருகிறேன்.

- பக்திமார்க்கமும் பிரம்மத்தை அதுவாகவே ஆகி அனுபவிக்கும் ஞானத்தில் கொண்டு சேர்க்கும். பக்தன் இந்த பிரம்ம ஞானத்துக்கு ஆசைப்படா விட்டாலும் கூட பகவானே அதை அவனுக்கு அனுக்கிரகித்து விடுவார்.

- அன்பு சேவை மூலம் வெளிக்காட்டப்படுகிறது. சேவை மூலம் அன்பு வளர்கிறது. சேவையிலிருந்து அன்பு பிறக்கிறது.

- எனக்கு ஒரு வேலை இருக்கிறது. மனித குலம் முழுவதையும் பேணுவதும் அவர்களது வாழ்க்கை முழுவதும் ஆனந்தம் நிறைந்து காணுமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயப்படுத்துவதுமே. எனக்கு பிரக்ஞை உண்டு நேர் பாதையில் இருந்து விலகிச் செல்லும் எல்லோரையும் மீளவும் நல்வழிக்கு இட்டுச் செல்வதும், பாதுகாப்பதுமே என்னிடம் பற்றுக்கொண்டவர்களை நான் ஒரு போதும் கை விட மாட்டேன்.

*(பாபா 21 ஆவது வயதில் அவரது தமையன் சேக்ஷுராஜுவுக்கு எழுதிய கடிதம்)*

☞ உங்கள் இதயங்களில் அன்பு என்னும் விளக்கை ஏற்றி வைக்க வந்திருக்கிறேன். நாளொரு வண்ணம் ஒளி பெருக்கி அந்த விளக்கைப் பிரகாசிக்கப் பண்ண வந்திருக்கிறேன். ஒரு குறிப்பிட்ட சமயத்தின் சார்பில் பேசுவதற்கு நான் வரவில்லை. ஒரு பிரத்தியேகமான கூட்டத்தினருக்கோ, நம்பிக்கைக்கோ, கொள்கைக்கோ, பிரசாரம் செய்யும் பணியில் வரவில்லை. ஒருமைத்துவம், நம்பிக்கை ஆன்மீகத்துவம், அன்பு, மார்க்கம் இந்த அன்பின் மேன்மை அன்பென்னும் பணி அன்பு செய்யும் கடமை இவைகளைப் பற்றியே நான் சொல்ல வந்திருக்கிறேன்.

☞ இதயத்தூய்மையுடன் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் முழுமை பெறும். உனது செயல்களை முழுமையாகவும், திருப்தியாகவும் செய்யுங்கள். அதற்காக சிறிது அதிக நேரம் செலவழிந்தாலும் பரவாயில்லை. அவசரப்பட்டு அரை குறை வேலை செய்யக்கூடாது அளவை எண்ணிக்கையை இறைவன் ஒரு போதும் பெரிதாகக் கருதுவதில்லை.

*(தமிழ் சனாதன சாரதி நவம்பர் 1999 ப-6)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1976 மே மாதம் சேவாதள தொண்டர்களுக்கு பகவான் பாபா ஆற்றிய உரையிலிருந்து.

- ஒவ்வொரு ஜீவராசியும் கடவுள் வாழும் கோயில் அந்த உள்ளுறையும் மெய்ப்பொருளை போற்றி வழிபடுதலே சேவைப்பணியாகும்.

- சத்திய சாயி நிறுவனம் மூன்று நியதிகளைக் கொண்ட பணியினால் தான் வளர்ச்சி பெற வேண்டும் தனிநபரின் சாதனை சமூக சேவை எல்லோரிடத்தும் அன்பு பாராட்டுதல்.

- கிராமங்களில் எழுத்துப் படிப்பறிவு இல்லாதவர்களுக்கு எழுதப் படிக்க கற்றுக்கொடுங்கள். இதனால் அவர்கள் அறிவு விசாலமடையும். குடிசைப் பகுதிகளுக்குச் சென்று சுகாதார உணர்வை புகட்டுங்கள். உடல் நலம் பேணும் வழி முறைகளைக் கற்றுக் கொடுங்கள். அவர்களையும் உங்களுடன் கூட்டுச் சேர்த்துக் கொண்டு துப்பரவு பணியில் ஈடுபடுங்கள். சேவையில் இறங்கி விட்டால் எவ்வளவோ நல்ல காரியங்கள் செய்ய வாய்ப்பு தானே தேடி வரும்.

- சாயி நிறுவனத்தில் எப்போதும் சாதி, மத, இன வேறுபாடுகளைக் கருதாது இவைகளுக்கு அப்பாற்பட்டு எல்லோரையும் ஒன்றாக நேசிக்கும் அன்பை வளர்க்கவே முயற்சிகள் செய்யப்பட்ட வேண்டும். இந்த மனித சகோதரத்துவத்தை உணர்த்தும் சமத்துவ உணர்வே நமது நிறுவனத்தின் சிறப்பம்சமெனலாம்.

- சாயி நிறுவனத்தில் அதிகார பிரயோகத்திற்கு இடமே கிடையாது. பதவி வகிப்பவர்களாயினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாளர்களாயினும் எல்லோரும் தொண்டர்களே. சுயநலச்சாயல் சிறிதுமின்றி ஓர் அர்ப்பண நிறுவனத்தில் இடமுண்டு. இப்படிச் செயலாற்றாதவர்களை நிறுவனத்தில் சேர்த்துக் கொள்ளக்கூடாது.

- சிலர் பல நிறுவனங்களில் பங்கு பற்றும் அங்கத்தினர்களாக இருக்கின்றனர். அப்படி இருப்பவர்கள் எந்தவொரு நிறுவனத்திற்கும் உண்மையான சேவை செய்ய முடியாது. மற்ற நிறுவனங்களில் தொடர்பு வைத்திருப்பவர்கள் சாயி நிறுவனத்தில் பொறுப்புக்களை வகிக்க முடியாது.

- இதுவரை சாயி நிறுவனம் சாதித்துள்ள நற்பணிகள் யாவும் தீவிரப்பணியாளர்களின் ஆடம்பரமில்லாத மௌனமான உழைப்பினாலேயே சாத்தியமாகியுள்ளது என்பதை நான் அறிவேன். சேவைப்பணி செய்வதில் நீங்கள் காட்டியுள்ள தியாக உணர்வும் சுயார்ப்பணமும் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அதைக்கண்டு நான் திருப்தியுமடைந்துள்ளேன்.

- எல்லாச்சேவையும் தெய்வார்ப்பணமாகவே செய்யப்பட வேண்டும். சேவை செய்யும் வாய்ப்பு ஒவ்வொன்றையும் கடவுளின் அன்பளிப்பு அல்லது வரப்பிரசாதம் எனக்கருதி வரவேற்க வேண்டும். இப்படிப்பட்ட உணர்வுடன் செய்யும் சேவை மெய்யுணர்வு பெற வழிவகுக்கும்.

- சேவாதளத் தொண்டர்கள் பிறருக்கு சேவை செய்தலை கடமையாகக் கொள்ள வேண்டும். பிறரிடமிருந்து பாராட்டுதலையோ அல்லது வேறு உதவியை எதிர்பார்த்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது ஆண்டிற்கு மூன்று முறையோ சேவைப்பணி செய்வதாகக் கூறிக் கொள்வதில் அர்த்தமில்லை இதனால் உங்கள் சோம்பேறித்தனமும் நம்பிக்கையின்மையும் ஊக்கமின்மையுமே வெளிப் படுகின்றன. ஒரு நாளைக்கு நான்கு முறை உணவு உட்கொண்டால் கூட உங்கள் பசி தீருவதில்லை! அதே போல உங்கள் ஆன்மீக பசிக்கு சேவா சாதனையை அடிக்கடி செய்ய வேண்டும்.

- நமது நிறுவனத்தில் உள்ள தலைவர்களெனப்படுவோர் தாம் முன்னோடியாகத் தொண்டுப் பணியில் தலைமைத் தொண்டராக செயற்பட்டு வழிகாட்ட வேண்டுமென்பது எனது அவா. சத்திய சாயி நிறுவனத்தில் ஒருவர் கூடச் சோடை போகக்கூடாது. நூற்றுக்கு நூறு எல்லோரும் சேவை மனப்பான்மை முழுமையாகக் கொண்டு இயங்க வேண்டும்.

- நூறு விடயங்ளைப் பற்றி பேசுவதைவிட ஒரு விடயத்தை செயலில் நிறைவேற்றினால் அதுவே சாலச் சிறந்தது. சுயநலமற்ற தொண்டினால் உங்கள் வாழ்வைப் புனிதமாக்கிக் கொள்ளுங்கள். அதிகம் பேசுபவருக்கு பணிபுரிய நேரமிருக்காது. பணியில் ஈடுபட்டிருப் போருக்கு பேசுவதற்கு அவகாசம் இருக்காது. வீண்பேச்சில் காலத்தைக் கழிப்பதை விட மனித குலத்திற்குச் செய்யும் சேவை இறைவனுக்குச் செய்யும் சேவையெனும் உணர்வுடன் இறைவனின் நாமத்தை நாவில் உச்சரித்தபடி சேவையில் ஈடுபட்டு வாழ்வைப் புனிதமாக்கிக் கொள்ளுங்கள்.

- தெய்வத்தை அடைவதற்கு சேவையைவிட இலகுவான வழி எதுவும் இல்லை என்பதை நன்கு புரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுங்கள். இது உங்களுக்கு இந்தப் பிறவியில் கிட்டியுள்ள ஒரு பொன்னான வாய்ப்பு என்பதை உணர்ந்திடுங்கள். சாயி நிறுவனத்தில் சேர்ந்து சேவை செய்யும் வாய்ப்பு உங்கள் வாழ்வை புனிதமாக்கிக் கொள்ள சிறந்த வழியாகும்.

- ஒவ்வொருவரும் அவரவரது சக்திக்கேற்ப தனது பணியை செய்து வரவேண்டும். இனிமேல் சிலர் அதிகாரிகளெனவும் சிலர் பணியாளர்களெனவும் வேறுபாட்டுணர்வு தலைதூக்கக்கூடாது. எல்லோரும் சமநிலைப் பணியாளர்களே என்ற உணர்வு உங்களிடம் நிலவ வேண்டும். வேற்றுமைகள் பல கொண்ட இந்த மனித குலத்தில் அடிப்படையாக இறையோடும் ஒற்றுமை உணர்வை உலகுக்கு எடுத்துக்காட்டும் வகையில் நீங்கள் செயற்பட வேண்டும்.

- நீங்கள் அமைக்கும் சட்ட திட்டங்கள் நிறுவனத்தில் அவர்கள் சேர்ந்து சேவை செய்ய தடையாக இருக்கக்கூடாது. ஆன்மீகக் கட்டுப்பாடாகவே இருக்க வேண்டும். பக்தர்களுக்கும் நிறுவனத்திற்கும் இடையே சுமுகமான உறவு நிலவும் வகையில் அன்பின் அடிப்படையில் இயங்க வேண்டும்.

- சேவைப் பணிகளில் ஈடுபட்டு மனிதன் இறைவனுக்குத் தனது கடனை திருப்பிச் செலுத்த வேண்டும். நீங்கள் யாருக்கு உதவி செய்தாலும் ஒரு சிறிது கடன் தீர்கிறது. மனிதனுக்கு உடல் அளிக்கப்பட்டிருப்பது அடுத்தவருக்குச் சேவை புரியத்தானே தவிர சுகங்களை அனுபவிப்பதற்காக அல்ல! உண்மையான சேவகனே நிய7மான நாயகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நீங்கள் அனைத்தையும் ஸ்வாமி பணியாகவே செய்யுங்கள். நான் உங்களது பணிகளை முடித்து வைக்கிறேன். ஒவ்வொரு காரியத்தையும் தெய்வ காரியமாகவே எண்ணுங்கள். தெய்வீக அதிர்வுகளே உங்களது வாழ்க்கைக்கு ஆதாரமாக விளங்குகின்றன.

- நீங்கள் இந்த உலகத்திற்கு என்ன கொண்டு வந்தீர்கள்? எதைக் கொண்டு செல்லப் போகிறீர்கள், வெறுங்கையுடன் போகப் போகிறீர்கள். போகும் போது எந்த உறவினரோ அன்றி நன்பரோ உங்களைப் பின் தொடரப்போவதில்லை. யாரும் எங்கே போகிறாய்? எனக் கூடக்கேட்க மாட்டார்கள். அவரவர் அவரவர் வழியில் போக வேண்டியது தான். உயிர் இருக்கும் வரை தான் இந்த சம்பந்தங்களும், பற்றுதல்களும். அதனால் யாரையும் வெறுக்காதீர்கள். அனைவரையும் நேசியுங்கள். கெட்டவரையும் அன்போடு அணுகுங்கள் அவனும் நல்லவனாக மாறுவான்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நன்றி

14.04.2010 சிவபதமெய்திய எங்கள் குல விளக்கு அமரர் திரு மார்க்கண்டு ஸ்ரீரவிகுலன் அவர்களின் இறுதிக் கிரியையின்போது நேரிலே சமூகம் தந்து எமது துன்ப துயரங்களில் பங்கு கொண்டவர்களுக்கும், தபால், தந்தி, தொலைபேசிமூலமும், கண்ணீர் அஞ்சலிகள் அச்சிட்டு வெளியிட்டோருக்கும் வேறு வகையாகவும் அனுதாபம் தெரிவித்தோருக்கும், அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மாவுக்கு ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்தித்தோருக்கும் இம்மலரினை அச்சிட்டு வெளியிட்டோருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவ

மார்க்கண்டு + இராசமணி(அமரர்)
கதிராசிப்பிள்ளை

பூரீரஞ்சனா (அமரர்)

**ஸ்ரீரவிகுலன்**

கலைவாணன்
+
சாரததேவி
சயந்தன்

கிருஸ்ணகுமாரி
+
வித்தியானந்தன்
பரதன்
விசாகன்
சொரூபினி
ராகவன்

இ

ஜெய

வ
ஆ

+
கிரிபரன்
ஜெனார்த்தன்
பிரணவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவழி

ஏரம்பமூர்த்தி + தங்கம்மா

- இளங்கோ + ஜெயலக்ஷ்மி
  - வானதி
  - ஆதவன்
- கீதவல்லி
- புனிதகுமாரி + ஈழநேசன்
  - சேயோன்
  - வித்தகி
- **விமலகுமாரி**
- இளமுருகன் + வனிதா
  - அக்ஷதன்
  - ஆதித்தியன்

தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது,
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றவருடயதாகிறது,
மற்றொருநாள்
அதுவே வேறொருவருடையதாகும்."
இதுவே உலக நீதியும்,
எனது படைப்பின் சாரம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



ரம்யன் அச்சகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org